## தொகுதிகள் மறு சீரமைப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் ஏற்கனவே உள்ள தொகுதிகளின் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது; இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க

# மார்ச் 5 - அன்று அனைத்துக் கட்சிகள் கூட்டம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் அளித்த பேட்டியில் அறிவிப்பு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (25.2.2025) தலைமைச் செயலகத்தில், 19–வது அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

**சென்னை, பிப். 26 -**

**“தொகுதிகள் மறு சீரமைப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் ஏற்கனவே உள்ள தொகுதிகளின் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது. இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க மார்ச் 5 - அன்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறுகிறது” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.**

தமிழ்நாட்டில் நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை குறைக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு வஞ்சிக்கிறது. இந்தச் சதி முடிவை ஒன்றிய அரசு உடனே கைவிட வேண்டும் என்றும்,

தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் மார்ச் 5ம் தேதி அனைத்துக்கட்சிக் கூட்டம் நடைபெறும் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முன்னதாக முதல்வர் ஸ்டாலின் தலைமையில் தமிழக அமைச்சரவைக் கூட்டம் நேற்று (பிப்.25) காலை நடைபெற்றது. இதைத் தொடர்ந்து முதல்வர் ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி :

தமிழகம் இன்று மிகப்பெரிய உரிமைப் போராட்டத்தை நடத்த வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளது. ஆகவே வருகிற 5ம் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்துவதாக அறிவிக்கிறோம்.

தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 40 கட்சிகளையும் அழைக்க முடிவு செய்து அவர்களுக்கு முறைப்படி இன்றுமுதலே அழைப்பு விடப்போகிறோம்.

இந்தக் கூட்டம் எதற்காக என்றால் தொகுதி மறுசீரமைப்பு பற்றி ஆலோசிக்க. தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் தென்னிந்தியாவின் தலைக்கு மேல் ஒரு கத்தி தொங்கிக் கொண்டிருக்கிறது.

எல்லா வளர்ச்சிக் குறியீடுகளிலும் தமிழகம் முதன்மை மாநிலமாக இருந்தும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் தற்போது 39 மக்களவை தொகுதிகள் உள்ளன. இதனை குறைக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஒன்றிய அரசு இதற்காக முயற்சித்து வருகிறது. தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய 8 தொகுதிகளை இழக்கக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது. இனி தமிழ்நாட்டில் 31 தொகுதிகள் தான் இருக்கும் என்ற சூழல் உருவாகும்.

அதிக மக்கள்தொகை கொண்ட மாநிலங்களில் இருந்து அதிக பிரதிநிதிகள் இருப்பார்கள். இதனால் நாடாளுமன்றத்தில் நமக்கான பிரதிநிதித்துவம் குறைந்து விடும். தமிழ்நாட்டின் குரல் நசுக்கப்படும். இது வெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை சார்ந்த கவலை மட்டும் அல்ல. இது மாநிலத்தின் உரிமை சார்ந்த கவலை என்பதை மறந்துவிடக் கூடாது.

ஆகவே, மார்ச் 5ம் தேதி நடைபெறும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் அரசியல் கடந்து, கட்சிகளை மறந்து பங்கேற்று குரல் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கூறினார்.

---

## ஒன்றிய அரசைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### தி.மு.க. மாணவரணி சார்பில் மாவட்டத் தலைநகரங்களில் போராட்டம்!

*சென்னை, பிப். 26 -* மும்மொழிக்கொள்கை என்ற பெயரில் தமிழ்நாட்டில் இந்தியைத் திணிக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து முயற்சித்து வருகிறது.

மேலும், இக்கொள்கையை ஏற்காவிட்டால் தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய கல்வி நிதியை வழங்க முடியாது என ஒன்றிய கல்வியமைச்சர் தர்மேந்திர பிரதான் ஆணவத்துடன் பேசியுள்ளார்.

இந்நிலையில், ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் தி.மு.க. மாணவரணி சார்பில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை, மதுரை, கோவை, திருச்சி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, ராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவாரூர், சேலம் உட்பட தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. மாணவரணி சார்பில் நடைபெற்ற இந்தித்திணிப்புக்கு எதிரான போராட்டத்தில் பல்வேறு மாணவர் அமைப்புகளைச் சேர்ந்தவர்களும், தி.மு.க.வினரும் பல்லாயிரக்கணக்கில் கலந்து கொண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து முழக்கங்களை எழுப்பினர்..

---

## தி.மு.க. மீனவர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

### தி.மு.க. மீனவர் அணி செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிவிப்பு!

*சென்னை, பிப். 26 -* கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தி.மு.க மாநில நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம் நாளை (27.02.2025 - வியாழக் கிழமை) காலை 10:00 மணியளவில் திருவொற்றியூர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. இல்லத்தில் மாநில தலைவர் இராபெர்னார்டு, மாநில துணைத் தலைவர்கள் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., இரா.மதிவாணன் ஆகியோர் முன்னிலையில் எனது (கழக மீனவர் அணிச் செயலாளர் அஜோசப் ஸ்டாலின்), தலைமையில் நடைபெற உள்ளதால் அனைத்து கழக மாநில மீனவர் அணி நிர்வாகி களும் கலந்து கொள்ளவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்

பொருள்: மீனவ மக்களின் நம்பிக்கை நாயகர், முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழா

2. அணியின் வளர்ச்சி பணிகள்

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## மக்களுக்கு நன்மை செய்வதில் நாம் கணக்கு பார்ப்பதில்லை!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!



‘**மு**தல்வர் மருந்தகம்’ திறப்பு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், ‘மத்திய அரசு என்று சொல்லிக்கொள்ளும், ஒன்றிய அரசின் நெருக்கடி இருந்தாலும், அந்த நெருக்கடிக்களுக்கு மத்தியிலும்,

அது பற்றி கவலைப்படாமல் தமிழ்நாட்டு நலன்களை மட்டுமே மனதில் வைத்துக் கொண்டு, தமிழ்நாட்டு மக்கள் மேல் நம்பிக்கை வைத்து இந்த திட்டங்களை நாங்கள் இன்று செயல்படுத்திக்கொண்டு இருக்கிறோம். இது எல்லாவற்றையும் மக்களுக்கான நம்முடைய கடமை என்று உணர்ந்து செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம். மக்களுக்கு நன்மை செய்வதில் நாம் கணக்கு பார்ப்பதில்லை” என்றார்.



கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம், குறிஞ்சிப்பாடி கழக அலுவலகத்தில், தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது. வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., மாவட்டக் கழகப் பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், மாவட்ட துணைச் செயலாளர்கள் அ.ஞானமுத்து, சக்திவேல், ஒன்றிய கழக செயலாளர்கள் அ.முத்துசாமி,வி.சிவக்குமார் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தியைத் திணித்து மீண்டும் மொழிப்போர்க்கு நிர்பந்திக்கும் பாசிச ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து தேனி வடக்கு மாவட்டம் தேனியில் மாணவரணி மாவட்ட அமைப்பாளர் ஸ்டீபன் ஏற்பாட்டில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. மற்றும் சரவணகுமார் எம்.எல்.ஏ. ஒன்றிய செயலாளர்கள் லட்சுமணன், ரத்தின சபாபதி, எல்.எம்.பாண்டி, சக்கரவர்த்தி, அய்யப்பன், கண்ணியாம்பட்டி முருகேசன், நகர செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.